குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திரு.சதாம்உசைன், B.A.,L.L.B.,
(மு.கூ.பொ) குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.584/2025

அ.சா.2

2026–ம் ஆண்டு ஜுலை 10–ம் தேதி வெள்ளிக்கிழமை அரசு தரப்பு சாட்சி 2–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.மோகனபிரியா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அரசு | தொழில் | |
| தந்தை பெயர் | சின்னஅண்ணன் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 03.29 மணி,

Accused A1)Moorthi, A2)Jayapriya are present. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் தற்போது ஓமலூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.01.2023–ம் தேதி உதவி ஆய்வாளராக பணியில் இருந்த சிவசாமி என்பவரது கையெழுத்து எனக்கு நன்கு தெரியும். வழக்கின் தன்மையை கருத்தில் கொண்டு ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 20.01.2023–ம் தேதி உதவி ஆய்வாளர் திரு.சிவசாமி என்பவர் நிலைய அலுவலில் இருந்த போது 16.00 மணியளவில் அதற்கு முன்னதாக ஓமலூர் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் அவர் அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த சாட்சி பிரபு என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் வந்து அதன் பேரில் நிலைய குற்ற எண்.61/2023 சட்டபிரிவுகள் 294(பி), 323, 324 இதச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். (**அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.3, முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

3. பின்பு வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு அன்றைய தினமே காலை 16.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் காவேரி மற்றும் சின்னதம்பி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும்

SADHAMHUSAIN S

Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.07.10 17:26:20 +0530

மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். (**அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.5, மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

4. பின்பு சாட்சிகள் 1 முதல் 6 வரை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு 23.01.2023 ஆம் தேதி 16.00 மணியளவில் ஓமலூரில் இருந்த எதிரிகள் மூர்த்தி மற்றும் ஜெயப்பிரியா ஆகியோர்களை கைது செய்து நிலையம் கொண்டு வந்து தக்க பிணையில் விடுவித்துள்ளார். பின்பு சம்பவத்தில் காயமடைந்த சாட்சி பிரபு என்பவருக்கு சிகிச்சை அளித்து காயச்சான்றிதழ் வழங்கிய மருத்துவர் சுகன்யா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று பெற்றுள்ளார். (**அந்த விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

5. பின்பு வழக்கின் புலன் விசாரணை முடித்து சம்பவம் நடந்தது உண்மையென தெரியவந்ததால் எதிரிகளின் மீது நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.** இல்லை

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 03.34 மணி.**

SADHAMHUSAIN S

Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.07.10 17:26:24 +0530